அதோடு மட்டுமல்லாமல் வேறு எந்தத் தொழில் செய்ய வேண்டு மென்று அவர்கள் பிரியப்படுகின்றார்களோ அந்தத் தொழிலுக்குத் தேவையான உதவிகளையும் செய்கின்றது. சில இடங்களில், அவர் கள் கூட நூல் நூற்பதற்கு எங்களுக்கு உதவி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையும் செய்து கொண்டிருக் கிறோம்.

உதவித் தொகைகளை மணியார்டர் மூலம் அனுப்புதல்

504 (*வினா எண் 12876) திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதியோர் உதவித் தொகை, ஊனமுற்றோர் உதவித் தொகை, விவசாயக் கூலிகள் உதவித் தொகைகள மணியார்டர் மூலம் அனுப்புவதால் தாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) உதவித் தொகைகளை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக பணத்தை விநியோகம் செய்ய அரசு பரிசீலனை செய் யுமா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) காலதாமதம் தவிர்ப்பதற்குரிய தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நடைமுறை யில் தாமதங்கள் நிகழக் கூடும். குறிப்பாக தவறுகள் சுட்டிக் காட்டப்படுமானால் அதற்குரிய காரணங்கள் ஆராயப்படும்.

(ஆ) கிராம நிர்வாக அலுவலர்களின் மூலம் பணம் விநி யோகம் செய்வது நிர்வாக காரணங்கள் பொருட்டு ஏற்பதற் கில்லை.

திரு. சு. சிவராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முதி யோர் உதவித்தொகையைப் பெறுகிறவர்கள் குறிப்பாக கிராமப் புறத்திலே இருக்கின்றவர்கள், முதிர்ந்த கல்வி அறிவு இல்லாதவர் களாக, ஒரே இடத்தில் நிலையாக இல்லாதவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மணியார்டர் மூல மாக அனுப்புகின்ற பணம் போய்ச் சேரவில்லை என்ற புகார் நிறைய இடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள் மூலமாக அல்லது அங்கேயிருக்கின்ற ஊராட்சி மன்றங்கள் மூலமாக உதவித் தொகையை வழங்குவ தற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர் களே, இந்த முதியோர் உதவித் தொகை சம்பந்தப்பட்டவர் களுக்கு முறையாகப் போய்ச்சேருகின்றதா என்று ஒவ்வொரு கால் ஆண்டிலேயும் கோட்டாட்சியரால் தணிக்கை செய்யப்படு கிறது,

அத்தகைய இடையூறுகள் ஏதாவது பணம் கொடுப்பதிலே ஏற்படுமானால் உடனடியாக அவைகளை நீக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் அஞ்சலகத்தில் முதியோர் உதவித் தொகையை மணியார்டர் மூலம் அனுப்புவதில் கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தவுடன், சென்னை தலைமை அஞ்சலகத் துறைத் தலைவரை அணுகி எல்லா மாவட்ட அஞ்சலகத்துறை கண்காணிப்பாளரும் முதியோர் உதவித் தொகை மணியார்டர்களை உடனுக்குடன் தாமதம் இன்றி அனுப்பிவைக்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு நம்முடைய ஆணையாளர் அவர்கள் கூறியுள்ளார்கள்.

திரு கி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தற்போது முதியோர் உதவித் தொகை மாதக் கடைசியில் கிடைக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. இதற்கிடையே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தற்போதுள்ள 23.000 முதியோர் உதவித் தொகைக்கான மனுக்களுக்கும் பணம் அளிப்பதாக அறிவித்திருப்பதாக செய்திகள் வருகின்றன. அதற்கு நன்றிதெரிவிக்கும் அதே நேரத்தில் ஒரு அஸிஸ்டென்ட் 300 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகைகளை மணியார்டர் மூலமாக அனுப்ப வேண்டும் என்று அரசு அறிவித்துள்ளதால் புதியதாக இந்த 23,000 பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை அனுப்பப் போகிறார்களே அதற்காக கிளார்க் போஸ்ட்கள் சாங்ஷன் ஆகின்றதா? சாங்ஷன் ஆகின்றது என்றால் அவர்களை உடனுக்குடன் நியமித்து இந்த 23,000 பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகையை காலாகாலத்தில் கொடுக்கின்ற உதவியை, அதிலும் முதல் வாரத்திலேயே அவற்றை அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா? ஏனென்றால் அவர்களுக்கு 25, 26 தேதிகளில் தான் கிடைப்பதாக முதியோர்கள் வருத்தப்படுகிறார்கள். ஆகவே இந்த முயற்சிகளை அரசு செய்யுமா? அவைகளை அனுப்புவதற்கு கிளார்க் போஸ்ட்களை சாங்ஷன் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:—தலைவர் அவர்களே, 23,039 முதியோர்களுக்கு பணம் வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணை இட்டதாக கேள்விப்படுகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இதை ஆணையாகவே அன்றைக்கு, முதலமைச்சர் அவர்கள் கட்டளையோடு நான் இங்கே சொன்னேன். அந்த நேரத்தில் அவர் இந்த அவையிலே இல்லை என்பதை அவரே தெரிவித்திருக்கிறார். 23,039 முதியோர்களுக்கும், சென்னையிலிருந்து அனுப்புவதில்லை. அந்தந்த மாவட்டத்தில் இருக்கின்ற மாவட்ட அலுவலர்கள் தான் அனுப்புகிறார்கள். தனியாக அவர்களுக்கு அலுவலர்கள் போட வேண்டிய தேவை இருக்காது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பிரச்சினைக்கும் தேவை இருக்காது.